புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# தலைமைப் பண்புகளைக் கட்டமைக்கும் சூழல் கவிதைகள்

**முனைவர் சு. சிவசந்திரகுமார்**
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் - 635601

**ஆய்வுச் சுருக்கம்**

அரசப் புலவர் (பெருங்கடுங்கோ) பாடியுள்ள தலைவி கூற்றில் அமைந்த கலித்தொகை 11 பாடலானது கவிஞர் நா. முத்துக்குமார் எழுதியுள்ள நியூட்டனின் மூன்றாம் விதி காதல் - 2000 என்ற கவிதையுடன் ஒப்பிடப்படுகின்றது. இவ்விரு படைப்புகளுக்கும் இடைப்பட்ட காலம் இரண்டாயிரத்துக்கும் மேலாகும். பெண்களின் மனநிலையை உணர்ந்து ஆண்கள் பாடுவது, தலைவன் தலைவியின் பிரிவு குறித்துப் பாடுதல் என்னும் பல்வேறு வகைமையில் ஒன்றுபடுகின்றது. இருப்பினும் இவ்விரு படைப்புகளிலும் காணலாகும் தலைவன் வேறானவனாகின்றான். இது சிக்கலாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அரசப் புலவர் படைத்துக் காட்டும் தலைவன் இலக்குடையவனாக இருக்கின்றான். கவிஞர் நா. முத்துக்குமார் படைத்துக் காட்டும் தலைவன் இலக்கற்றவனாக இருக்கின்றான். இதற்கான காரணம் படைப்புகளைக் கருப்பொருள் அடிப்படையில் அணுகும் போது நா. முத்துக்குமார் படைத்துக் காட்டும் கருப்பொருள்கள் சூழல் குறையுடையனவாக உள்ளன. எனவே, இத்தலைவன் இலக்கற்றவனாக இருக்கின்றான். இவ்விரு புலவர்களின் பாடல்களில் இலக்கு நிர்ணயித்தலில் வேறுபாடு காணப்படுவதற்குச் சூழலியலும் மறுக்கமுடியாத ஒரு காரணமாக அமைந்துள்ளது. உயர்நோக்குடைய சமூகம் ஒன்றிக்குச் சூழல் மிக முக்கியமானது. சூழலைச் சீரமைப்பதன் மூலமே இலக்குடைய உயர்நோக்குச் சமூகம் வாய்க்கப்பெறும் என்பதே இக்கட்டுரையின் சாரமாகும்.

***குறிச் சொற்கள் (key words):*** *தலைவி கூற்று, கலித்தொகை 11, நியூட்டனின் மூன்றாவது விதி,*

**முன்னுரை**

சங்க இலக்கியத்திலுள்ள பாலைத்திணைப் பாடல்கள் 530 ஆகும். **இவற்றுள்** தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடிச் செல்லும் துறையில் 442 செய்யுள்கள் காணப்படுகின்றன.

*தமிழ்க் கவிதையில் இடம்பெறும் பாலை நிலப்பாடல்கள் கடுமையான தட்பநிலையுடன் இணைந்த நிலவியலின் ஒரே மாதிரித்தன்மை அளிக்கும் மனச்சோர்வு, செயலில் ஈடுபடும் தைரியத்தை உறிஞ்சி, அறிவு வளத்தை முடக்குகின்ற சகிப்புத் தன்மையையும் அதை ஏற்கும் மனநிலையையும் சுமத்துகிறது. அடுத்தடுத்த மாவட்டங்களின் நிலஅமைப்பு வேறுபாடுகள்* **கூடக்** *கலைநோக்குகளில் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. அரசப்புலவர் தம் பாலைநிலத்தின் வருணனையில், அடி தாங்கும் அளவு இன்றி அழல் அன்ன வெம்மையால் கடியவே காடு என்றார். அக்காட்டினுள்ளும் கயந்தலை கலக்கிய சின்னீர் - நீராதாரம் உடையதாகப் படைத்துக் காட்டுகின்றார். கவிஞர் நா. முத்துக்குமார் கவிதையில் நீராதாரக் குறைபாட்டிற்கான காரணத்தைக் குறிப்பிடும் போது சூழல் வேறுபாடு காரணமாக அங்கு நீராதாரம் இல்லை என்கிறார் என்பதை நிறுவுதல் மூலம் தலைவன் இலக்கற்றவனாகக் காணப்படுகின்றான். புற உலகின் சூழலியல் கவிதைகள், தலைமை மாந்தர்களைக் கட்டமைப்பதில் பெரும்பங்காற்றியுள்ளன என்பதை இவ்விரு கவிதைகளை ஒப்பிட்டு எடுத்துச் சொல்வதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

***கலித்தொகை (11)***

*தலைவன் பொருளீட்டச் சென்றார். பொருள் ஈட்டி அறம் செய்து இன்பம் துய்க்கலாம் என்று சொல்லிவிட்டுச் சென்றார். காரணம் 1) அருள் பெறாமல் வாடுபவர்களுக்கு உதவுதல் வேண்டும். 2) பகைவரை வென்று பிறரைப் பேணாதவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும். 3) இனியவரைத் துய்க்கும் இன்பம் ஆகிய மூன்றையும் செல்வமாகிய பொருள் தரும் என்று இலக்குடைய வாழ்வினை மேற்கொள்கின்றான். இவ் இலக்கிற்கு எதிரான எண்ணங்கள் தோன்றும் பொழுது காட்டில் காணும் காட்சிகள் இலக்கு நோக்கிப் பயணிக்க உதவுகின்றன. அக்காட்சிகளில் ஒன்று கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடிக்கு* **ஊட்டிக் களிறு** *பின் உண்ணுகின்றது. இக்காட்சியில் காட்டில் சின்னீர் இருப்பதாக அமைந்துள்ளது. உலகிலுள்ள மொத்த நீரையும் மூன்று வகையாகப் பிரிப்பர். 1) பச்சை நீர், 2) நீலநீர், 3) சாம்பல் நீர். இவற்றுள் பச்சை நீர் என்பது வளிமண்டலத்தில் முகில்களில் நிறைந்துள்ள நீர். நீல நீர் என்பது நீர்நிலைகளிலும் நிலத்தடியிலும் உள்ள நீர். உலகில் பச்சை நீரும் நீல நீரும் மட்டுமே இருந்தபோது, நீர்த்தட்டுப்பாடு ஏற்படவில்லை. சாம்பல் நீர் தோன்றிய பிறகே சிக்கல் தோன்றியது.[1] கலித்தொகை 11* **ஆம்** *பாடலில் குறிப்பிடப்படும் நீர் நீலநீர் ஆகும். சின்னீர் அடி தாங்கும் அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால் கடிய காடு. அக்காட்டினுள் நீர் இருப்பதற்குத் தகுந்த காரணம் தலைவன் இலக்குடையவனாக இருப்பதே; அல்லது நீர்வளம் இருப்பதால் தலைவன் இலக்குடையவனாக இருக்கின்றான் என்பதாகும். அத்துடன் அத்தகைய இலக்கினைத் தலைவனுக்கு அச்சூழல் வழங்குகின்றது. கலித்தொகை*ப் *பாடல்களை விளிம்பு நோக்கில் அணுகிய ராஜ்கௌதமன் "பாலைப்பாடல்கள் முப்பத்தைந்தில் முதல் இருபத்தைந்து பாடல்கள் (2-25), பழந்தமிழ் அகமரபில் உள்ள பாலைத்திணைப் பாடல்களைப் பெரிதும் பின்பற்றியுள்ளன" என்கிறார்.[2] அத்துடன் "பெண்ணுக்கு ஆணைவிட அவளது உடலில், சுழற்சியான உடல் இயக்கத்தைச் சார்ந்த செழிப்பு ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கையும் அதைச்*

*சார்ந்த சடங்குகளும் சடங்குகளால் ஆன விழாக்களும் தொல்குடிக் குழுச் சமூகங்களில் பரவலாகக் காணப்படுவதாகும்" என்று குறிப்பிடுவார்*[3]*. அந்த வகைமையின் கீழ் அமைந்த பாடலாகக் கலித்தொகை 11* **ஆம்** *பாடலைக் கொள்ளலாம்.*

***நியூட்டனின் மூன்றாம் விதி காதல் -2000***

*கைப்பையை இடிதாங்கியாக்கி நகராட்சிப் பேருந்துகளில் இடிபட்டுக் கொண்டிருக்கும் என்னைச் சிறைமீட்க சீக்கிரம் வரச் சொல்வாயாக எனத் தோழியிடம் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. காய்ந்து வெடித்த முருங்கைக் காய்கள் தொங்கும் வீதிகள் குறிப்பிடப்படுகின்றன. முருங்கை அனைத்து வகை மண்ணிலும் வளரக் கூடியது எனினும், மணல் சார்ந்த அங்ககத் தன்மை அதிகமுள்ள நிலங்களில் நன்றாக வளரும் தன்மையுடையது. இது வறண்ட, பாசன வசதி குறைந்த, வெப்பம் அதிகமுள்ள பகுதியிலும் நன்கு வளரக்கூடியது. தலைவனின் நகருக்கு முருங்கை கருபொருளாகின்றது.*

***தலைவனின் இருப்பிடச் சூழல் வருணனை***

*1) வீதிகள் தோறும் புகைப்படலம் , 2) கொசு மருந்தடிக்கும் நகராட்சி வண்டிகள் நிறைந்த நகரம், 3) குழாயடிகளில் குடங்கள் தவமிருக்கிற அவலம், 4) சாக்கடைகளிலிருந்து கரும்புலப் பெயல் நீர் ஓடுகிற... இவையனைத்தும் சூழலைப் பாதிக்கும் காரணிகளாகும். குறிப்பாக இக்கருப்பொருள்கள் தலைவனின் பண்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இக்கழிவுநீரே 'சாம்பல் நீர்' என்றழைக்கப்படுகின்றது. ஆலைகள் மற்றும் நகர்ப்புறக் கழிவுகள் தண்ணீரில் கலந்ததால் ,* ***அவை*** *நன்னீரை அதாவது, நீலநீரைச் சாம்பல் நீராக மாற்று****கின்றன****. ஒரு லிட்டர் குரூடாயில் தவறி ஒரு குளத்தில் கொட்டிவிட்டால் , அது தோராயமாக ஒன்றரை இலட்சம் லிட்டர் நீரை விணாக்கிவிடும் என்கிறார்கள்.*[4] *சாக்கடைகளிலிருந்து கரும்புலப் பெயல் நீர் ஓடுகிற காரணத்தால் தலைவன் இலக்கற்றவனாக இருக்கின்றான்; அல்லது நீர்வளம் இல்லாததால் தலைவன் இலக்கற்றவனாக இருக்கின்றான் என்பதாகும். "காலடிகளால் பயம் கொண்டு கடற்பூச்சிகள் வலைக்குள் பதுங்கும் பகலில் பஜ்ஜி சுண்டல் பலூன்காரர்கள் விற்பனைக்கு ஆயத்தமாகாத வெயிலில் கடற்கரையின் வெண்மணல் திட்டில் அமர்ந்து வெப்பங்கடத்தும் காதலர்கள் வாழ்கிற..." நகரத்தைச் சேர்ந்தவன் அவன். இக்கவிதையில் தலைவனின் பண்புகள் நேரடியாகச் சுட்டப் பெறவில்லை. அதே நேரத்தில் இத்தகைய நகரத்தைச் சேர்ந்தவன் என்பதால் தலைவனுக்கும் இப்பண்புகள் பொருத்தமுடையதாகின்ற****ன****. கடற்கரை****ப்*** *பகலில் ஆள் நடமாட்டம் இல்லாமையில் இயல்பாக உலவலாம் என்றிருந்த கடற்பூச்சிகள் வலைக்குள் பதுங்கும் அளவிலான காலடிகள் என்கிறார். அக்காலடிகள் வெயிலில் வெண்மணல் திட்டில் வெப்பங்கடத்துகின்றதென்பதும் அந்நகரைச் சேர்ந்தவன் தலைவன் என்ப****துமாக****, அத்தலைவனும் இலக்கற்றவனாகின்றான். தலைவன் இலக்கற்றவனாக இருப்பதற்கு அவன் வாழும் சூழல் காரணமாகின்றது. அச்சூழலானது வீதிகள் தோறும் புகைப்படலம், கொசு மருந்தடிக்கும் நகராட்சி வண்டிகள் நிறைந்த, குழாயடிகளில் குடங்கள் தவமிருக்கிற, சாக்கடைகளிலிருந்து கரும்புலப் பெயல்நீர் ஓடுகிற... நகரமாக இருக்கின்றது. அதனாலே*

தலைவன் இலக்கற்றவனாக இருக்கின்றான். கால் அடி பொறுக்கமுடியாத அழல் போன்ற வெப்பம் மிகுந்த காட்டில் தலைவன் இலக்குடன் பொருள் தேடிச் செல்வதாகப் பாலை பாடிய பெருங்கடுங்கோ தலைவனைப் படைத்துள்ளார். நா. முத்துக்குமார் படைத்துள்ள தலைவன் அதே அளவுள்ள வெண்மணல் திட்டில் அமர்ந்து வெப்பங்கடத்தும் நகரைச் சேர்ந்தவனாக இருக்கின்றான். அந்தந்தப் பகுதியில் தோன்றும் இலக்கியம், கலை ஆகியவற்றின் நோக்கிலும் போக்கிலும் கூட நிலவியல் செல்வாக்குச் செலுத்துமென சொரோக்கின் கூறுவதற்கு முன்பே நிலவியல் கொள்கையை முன்மொழிந்த ஹண்டிங்டன் *(Huntington)* ஒரு சமுதாய நாகரிகத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் நிலவியல் தீர்மானிக்கும் என்று காட்டினார்.[5] அவை,

*1) நிலவியல் மனிதனின் உடல்நலத்தின் மேல் செல்வாக்குச் செலுத்தும்.*

*2) நிலவியல் காரணங்களால் சமுதாய மக்களிடையே அக, புற ஒருமைப்பாடு அமையும்.*

*3) தட்பவெப்ப நிலையின் மாற்றத்திற்குத் தக்க மனித ஆற்றலும் கூடும்; குறையும்.* இக்கூற்றுகளுக்குத் தமிழ் நிலப்பகுதியில் அமைந்துள்ள இலக்கியங்கள் சான்றுகளாகின்றன. குற்றவியலின் சட்டங்களின் அடிப்படையில் ஒரு குற்ற நிகழ்வை உறுதி செய்வதற்குக் குற்றம் சாட்டப்பட்டவரின் "குற்றமுறு மனம் *(Mens Rea)* என்ற அம்சம் அடிப்படைத் தேவையாகக் கருதப்படுகிறது. அது உணரப்படாமல் இருக்குமானால் அது வீரியம் குறைந்த குற்றமாகக் கருதப்படுகிறது. சூழல் சார்ந்த குற்றச் செயல்களும் இந்த அடிப்படியிலே காணப்படுகின்றது".[6] ஒரு செயல் குற்றமாவதற்கு நான்கு நிலைகள் கொண்டிருக்க வேண்டும். 1. மனத்தில் நிலைத்தல் – *Intention*, 2. முன்னேற்பாடு – *Preparation*, 3.முயற்சி – *Attempt* , 4. முடிவு – *Completion* இந்நான்கு நிலைகளில் அறநெறிக்கு முதலாவதான மனத்தில் நினைத்தல் முக்கியமான குற்றமாகும். மனத்தால் நினைத்தாலே குற்றம் தான். இந்த நான்கு நிலைகளும் அறநெறிக்கு இன்றியமையாதவையாகும். சட்ட நெறிக்கு அப்படியன்று. சட்ட நெறிக்கு மனத்தில் நினைத்தல் குற்றம் ஆகாது. இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 511, முதல்நிலையினைக் குற்றமாகக் கருதவில்லை.

## தொகுப்புரை

கலித்தொகை ஆம் 11 பாடல் தலைவன் இலக்குடையவனாக இருக்கின்றான். நியூட்டனின் மூன்றாம் விதி காதல் 2000 கவிதையின் தலைவன் இலக்கற்றவனாக இருக்கின்றான். இதற்குச் சுற்றுச்சூழலும் ஒரு காரணமாக இருக்கின்றது என்பதைக் கட்டுரை நிறுவுகின்றது. கலித்தொகை **ஆம்** 11 பாடல் தலைவன் இலக்குடையவன் என்பதை அறம் சார்ந்து கற்பிக்கின்றது. பண்டைய தொல் மனத்திலிருந்து பேசுகின்றது. அதற்கான தீர்வையும் கொண்டு கருப்பொருள் பொருத்தப்பாடுகளைக் கொண்டமைத்துள்ளது. நியூட்டனின் மூன்றாம் விதி காதல் -2000 அதே அற அமைப்பைக் கொண்டு பாடப்பட்டதாகத் தெரியவில்லை. அரசையும் தலைவனையும் எள்ளல் தொனியில் படைத்துக் காட்டுகின்றது.

## நிறைவுரை

*தற்காலங்களில் இலக்கியங்கள் அறநெறிச் சார்புணர்ந்து இலக்கியம் படைக்கப்பட **வேண்டும்**; அல்லது சுற்றுச் சூழல் சட்டவியலின் அடிப்படைக் கோட்பாடுகளான 1) முன்னெச்சரிக்கை, 2) சீரழிப்பவரே செம்மை செய்தல் என்னுமிரு கோட்பாடுகளும் கவனம் கொள்ளப் பெற வேண்டும். இவ்விரு கோட்பாடுகளுக்கான முன்னெடுப்புகள் கலித்தொகைப் பாடல்களில் (1-25) காணப்படுவதைப் போல் காதல் 2000 காணப்படவில்லை. இலக்கியம் அறத்திலிருந்து ஆதங்கம் நோக்கி நகர்ந்திருப்பதைப் போல் காணப்படுகின்றது. அஃது இலக்கிய மாற்றமா சூழல் மாற்றமா என்பது கொள்வதற்கில்லை. ஏதேனும் ஒரு சங்கப் பிரதியுடன் தற்கால ஆக்க இலக்கியக் கவிதையொன்றை ஒப்பிட அதற்கான காரணிகளைக் கணக்கீட முடியும்.*

**சான்றெண் விளக்கம்**


1. *நக்கீரன் , இயற்கை 24X7 சுற்றுச்சூழல் வழிகாட்டி நூல், காடோடி, சென்னை. 2023 ப. 55.*
2. *ராஜ்கௌதமன்., கலித்தொகை - பரிபாடல் ஒரு விளிம்பு நிலை நோக்கு., விடியல் பதிப்பகம்.,சென்னை. 2010. ப.30*
3. *மேலது. ப.35.*
4. *நக்கீரன் , இயற்கை 24X7 சுற்றுச்சூழல் வழிகாட்டி நூல், காடோடி,சென்னை. 2023. ப. 55.*
5. *க.ப. அறவாணன்., சொரோக்கின் சமூகவியல் கோட்பாடும் பண்டைத் தமிழ் முப்பொருள் கோட்பாடும்., சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு., ந. கடிகாசலம் (பதி)., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை. 1998. ப. 284.*
6. *பி. சுந்தரராஜன்., சுற்றுச்சூழல் சட்டம் தேவை புதிய பார்வை ., பூவுலகின் நண்பர்கள்.,சென்னை. 2017.*